# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 1786/விசாரணை/E/2024</u>**

திருமதி.R.நந்தினி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை,
சென்னை-3. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை-10, மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலக நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பிருந்தா 10.04.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 08.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக விசாரணையின் அறிக்கையின் நகல்கள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். அதனை பரிசீலனை செய்த ஆணையம் மேல்முறையீட்டாளருக்கு விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் அடங்கிய ஆணையின் நகல் மற்றும் மருத்துவக் குழுவின் அறிக்கையின் நகல் ஆகியவற்றை சான்றிட்டு மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு வாய்மொழியாக பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

2. அதனைத் தொடர்ந்து, சென்னை-10, மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலக நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக உதவியாளர் திருமதி.அருணா 27.04.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, மேல்முறையீட்டு அலுவலரின் 10.04.206 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. கூடுதல் மருத்துவக் கல்வி (ம) ஆராய்ச்சி இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலர் 10.04.2026 தேதியிட்ட தனது அறிக்கையில் மேல்முறையீட்டாளருக்கு 10.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் அடங்கிய ஆணையின் நகல் மற்றும் மருத்துவக் குழுவின் அறிக்கையின் நகல் ஆகியவற்றை சான்றொப்பமிட்டு 13.04.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு அதனை மேல்முறையீட்டாளர் 15.04.2026 அன்று

பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணையதள Tracking Report-ன் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆகவே, மேல்முறையீட்டு அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 07.05.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA1786/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநரகம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

திருமதி.R.நந்தினி க/பெ.திரு.ராஜன்
3/2 பூங்கா நகர், 1வது தெரு,
ராஜா கடை, காலடிபேட்டை,
திருவொற்றியூர், சென்னை-19.

Copy to: File

RJ/PS 8.5